ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமஞ்சனகாலத்தில் அநுசந்திக்கும் பாசுரங்கள்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமஞ்சனகாலத்தில் அநுசந்திக்கும் பாசுரங்கள்

‡ வெண்ணெய் அளைந்த குணுங்கும் ⋆
    விளையாடு புழுதியும் கொண்டு ⋆
திண்ணென இவ்விரா உன்னைத் ⋆
    தேய்த்துக் கிடக்க நானொட்டேன் ⋆
எண்ணெய்ப் புளிப்பழம் கொண்டு ⋆
    இங்கெத்தனை போதும் இருந்தேன் ⋆
நண்ணல் அரிய பிரானே ! ⋆
    நாரணா ! நீராட வாராய் ‖ **2.4.1** ‖

கன்றுகள் ஓடச் செவியில் ⋆
    கட்டெறும்பு பிடித்திட்டால் ⋆
தென்றிக் கெடுமாகில் ⋆
    வெண்ணெய் திரட்டி விழுங்குமா காண்பன் ⋆
நின்ற மராமரம் சாய்த்தாய் ! ⋆
    நீ பிறந்த திருவோணம் ⋆
இன்று நீ நீராட வேண்டும் ⋆
    எம்பிரான் ! ஓடாதே வாராய் ‖ **2.4.2** ‖

பேய்ச்சி முலை உண்ணக் கண்டு ⋆
    பின்னையும் நில்லாதென் நெஞ்சம் ⋆
ஆய்ச்சியர் எல்லாரும் கூடி ⋆
    அழைக்கவும் நான் முலை தந்தேன் ⋆

prapatti dot com
sunder kidambi

காய்ச்சின நீரொடு நெல்லி ⋆
    கடாரத்தில் பூரித்து வைத்தேன் ⋆
வாய்த்த புகழ் மணிவண்ணா ! ⋆
    மஞ்சனம் ஆட நீ வாராய் ॥ **2.4.3** ॥

கஞ்சன் புணர்ப்பினில் வந்த ⋆
    கடிய சகடம் உதைத்து ⋆
வஞ்சகப் பேய்மகள் துஞ்ச ⋆
    வாய் முலை வைத்த பிரானே ! ⋆
மஞ்சளும் செங்கழு நீரின் ⋆
    வாசிகையும் நாறு சாந்தும் ⋆
அஞ்சனமும் கொண்டு வைத்தேன் ⋆
    அழகனே ! நீராட வாராய் ॥ **2.4.4** ॥

அப்பம் கலந்த சிற்றுண்டி ⋆
    அக்காரம் பாலில் கலந்து ⋆
சொப்பட நான் சுட்டு வைத்தேன் ⋆
    தின்னல் உறுதியேல் நம்பி ! ⋆
செப்பிள மென்முலை யார்கள் ⋆
    சிறு புறம் பேசிச் சிரிப்பர் ⋆
சொப்பட நீராட வேண்டும் ⋆
    சோத்தம் பிரான் ! இங்கே வாராய் ॥ **2.4.5** ॥

எண்ணெய்க் குடத்தை உருட்டி ⋆
    இளம் பிள்ளை கிள்ளி யெழுப்பி ⋆
கண்ணைப் புரட்டி விழித்துக் ⋆
    கழகண்டு செய்யும் பிரானே ! ⋆

prapatti.com sunder kidāmbi

உண்ணக் கனிகள் தருவன் ⋆
    ஒலிகடல் ஓத நீர் போலே ⋆
வண்ணம் அழகிய நம்பீ ! ⋆
    மஞ்சனம் ஆட நீ வாராய் ‖ **2.4.6** ‖

கறந்த நற் பாலும் தயிரும் ⋆
    கடைந்துறிமேல் வைத்த வெண்ணெய் ⋆
பிறந்ததுவே முதலாகப் ⋆
    பெற்றறியேன் எம்பிரானே ! ⋆
சிறந்த நற்றாய் அலர் தூற்றும் ⋆
    என்பதனால் பிறர் முன்னே ⋆
மறந்தும் உரையாட மாட்டேன் ⋆
    மஞ்சனம் ஆட நீ வாராய் ‖ **2.4.7** ‖

கன்றினை வால் ஓலை கட்டிக் ⋆
    கனிகள் உதிர எறிந்து ⋆
பின் தொடர்ந்தோடி ஓர் பாம்பைப் ⋆
    பிடித்துக் கொண்டாட்டினாய் போலும் ⋆
நின் திறத்தேன் அல்லேன் நம்பி ! ⋆
    நீ பிறந்த திரு நல் நாள் ⋆
நன்று நீ நீராட வேண்டும் ⋆
    நாரணா ! ஓடாதே வாராய் ‖ **2.4.8** ‖

பூணித் தொழுவினில் புக்குப் ⋆
    புழுதி அளைந்த பொன்மேனி ⋆
காணப் பெரிதும் உகப்பன் ⋆
    ஆகிலும் கண்டார் பழிப்பர் ⋆

நாண் எத்தனையும் இலாதாய் ! ⋆
    நப்பின்னை காணில் சிரிக்கும் ⋆
மாணிக்கமே ! என் மணியே ! ⋆
    மஞ்சனம் ஆட நீ வாராய் ॥ **2.4.9** ॥

‡ கார்மலி மேனி நிறத்துக் ⋆
    கண்ண பிரானை உகந்து ⋆
வார்மலி கொங்கை யசோதை ⋆
    மஞ்சனம் ஆட்டிய ஆற்றை ⋆
பார் மலி தொல் புதுவைக் கோன் ⋆
    பட்டர் பிரான் சொன்ன பாடல் ⋆
சீர் மலி செந் தமிழ் வல்லார் ⋆
    தீவினை யாதும் இலரே ॥ **2.4.10** ॥

## திருக்குறுந்தாண்டகம்

முன் பொலா இராவணன் தன் ⋆
    முது மதிள் இலங்கை வேவித்து ⋆
அன்பினால் அனுமன் வந்து ⋆
    ஆங்கடி இணை பணிய நின்றார்க்கு ⋆
என்பெலாம் உருகி உக்கிட்டு ⋆
    என்னுடை நெஞ்சம் என்னும் ⋆
அன்பினால் ஞானநீர் கொண்டு ⋆
    ஆட்டுவன் அடியனேனே ॥ **15** ॥

மாய மான் மாயச் செற்று ⋆ மருதிற நடந்து ⋆ வையம்
    தாயமா பரவை பொங்கத் ⋆ தட வரை திரித்து ⋆ வானோர் -
க்கீயுமால் எம் பிரானார்க்கு ⋆ என்னுடைச் சொற்கள் என்னும் ⋆
    தூயமா மாலை கொண்டு ⋆ சூட்டுவன் தொண்டனேனே ॥ **16** ॥



sunder kidāmbi
prapatti dot com
sunder kidāmbi

## திருவிருத்தம்

சூட்டு நன் மாலைகள் ⋆ தூயன வேந்தி ⋆ விண்ணோர்கள் நன்னீர்
ஆட்டி ⋆ அந்தூபம் தராநிற்கவே அங்கு ⋆ ஓர் மாயையினால்
ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப் போந்திமில் ஏற்று வன் கூன் ⋆
கோட்டிடை ஆடினை கூத்து ⋆ அடல் ஆயர் தம்
கொம்பினுக்கே ‖ **21** ‖

## திருவாய்மொழி

பூசும் சாந்தென் நெஞ்சமே ⋆ புனையும் கண்ணி எனதுடைய ⋆
வாசகம் செய் மாலையே ⋆ வான் பட்டாடையும் அஃதே ⋆
தேசம் ஆன அணிகலனும் ⋆ என் கை கூப்புச் செய்கையே ⋆
ஈசன் ஞாலம் உண்டுமிழ்ந்த ⋆ எந்தை ஏக மூர்த்திக்கே ‖ **4.3.2** ‖

## பெரியாழ்வார் திருமொழி

காடுகள் ஊடு போய்க் ⋆
கன்றுகள் மேய்த்து மறியோடி ⋆ கார்க்கோடல் பூச்
சூடி வருகின்ற தாமோதரா ! ⋆
கற்றுத் தூளி காண் உன் உடம்பு ⋆
பேடை மயிற் சாயல் பின்னை மணாளா ! ⋆
நீராட்டமைத்து வைத்தேன் ⋆
ஆடி அமுதுசெய் அப்பனும் உண்டிலன் ⋆
உன்னோடுடனே உண்பான் ‖ **3.3.3** ‖

திண்ணார் வெண் சங்குடையாய் ! ⋆
திருநாள் திருவோணம் இன்றேழு நாள் ⋆ முன்
பண் நேர் மொழியாரைக் கூவி முளை அட்டிப் ⋆
பல்லாண்டு கூறுவித்தேன் ⋆

கண்ணாலம் செய்யக் ⋆
    கறியும் கலத்ததரிசியும் ஆக்கி வைத்தேன் ⋆
கண்ணா ! நீ நாளைத் தொட்டுக் கன்றின் பின் போகேல் ⋆
    கோலம் செய்திங்கே இரு ॥ **3.3.9** ॥

திருமஞ்சனகாலத்தில் அநுசந்திக்கும் பாசுரங்கள் முற்றிற்று

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

sunder kidambi prapatti dot com sunder kidāmbi